வளர்ந்து வரக்கூடிய பகுதி என்பதிலே மாற்றுக் கருத்து இல்லை. விவசாயம் சார்ந்திருக்கக்கூடிய பகுதியாக இருந்தாலும், தொழில் வளம் நிச்சயமாகத் தேவைப்படக்கூடிய ஒரு பகுதி என்பதை மாண்புமிகு உறுப்பினருடன் சேர்ந்து நானும் உணர்ந்திருக்கிறேன். எனவே, வருங்காலங்களிலே திண்டுக்கல் மாவட்டத்திலே ஒரு தொழிற்பூங்காவை உருவாக்கக்கூடிய சூழ்நிலை உருவாகும்போது நிச்சயமாக பழனியை நாங்கள் கருத்திலே கொள்வோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 226. (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் தொகுதிக்கு என்னென்ன வேண்டுமோ அதை உரிமையோடு கேட்க வேண்டும். ஆனால், சம்பந்தமே இல்லாமல் என் பெயரை இழுத்து முருகன் கோயில், முருகன், முருகன் என்றால், என்னைக் கேட்காமல் இது என்ன சமாச்சாரம் என்று தெரியவில்லை. (சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 226, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

226—

கூடுதல் மின்மாற்றி

***7390—திரு. கு. செல்வபெருந்தகை:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, சிவபுரம் ஊராட்சியில் கூடுதல் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2022 மே 5]

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் அதிக மின் பளுவைக் குறைப்பதற்கு 13 கூடுதல் மின்மாற்றிகள், குறைந்த மின்னழுத்தத்தைச் சரி செய்ய 15 புதிய மின்மாற்றிகள் என மொத்தம் 28 மின்மாற்றிகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி 1 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பில் கடந்த 4 மாதங்களில் இயக்கத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. அதில், சிவபுரம் ஊராட்சியில் கூடுதல் மின்மாற்றி அமைக்கப்பட்டு, 12–2–2022 முதல் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கோடைக் காலம், அக்னி நட்சத்திர காலம் நடந்து கொண்டிருக்கிறது. சம்சாரம் இல்லாமல் இருக்கலாம்; ஆனால் மின்சாரம் இல்லாமல் இருக்க முடியாது என்று சொல்வார்கள். அந்த அடிப்படையிலே எங்களுடைய மாவட்டத்திற்கு ஏறக்குறைய 137* transformers*–மின்மாற்றிகளைக் கொடுத்திருக்கிறீர்கள். என் தொகுதிக்கு 28 மின்மாற்றிகளைக் கொடுத்திருக்கிறீர்கள். அதில் பிரச்சினை இல்லை. தற்சமயம் 106 முறை, நம்முடைய மின் பயனாளிகள் 15,000 மெகா வாட் மின் நுகர்வினைத் தொட்டிருக்கிறார்கள். இப்போது, உச்சபட்சமாக 17 ஆயிரத்து 563 மெகா வாட் மின்சாரத்தை பயனாளிகள் பயன்படுத்துகிறார்கள். ஏறக்குறைய 388* million unit *ஆக, 38 கோடியே 80 இலட்சம் மெகா வாட் மின்சாரத்தை தயாரித்து பயனாளிகளுக்குக் கொடுக்கிறீர்கள். இனிவரும் காலங்களில். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொள்ளுங்கள். மின்மாற்றி அமைக்கப்படுமா என்று கேட்கிறீர்கள்,* budget*–ல் பேசுவது போன்று பேசுகிறீர்கள். மின்மாற்றியைக் கேளுங்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *சிவபுரத்தில் ஏற்கெனவே* shock *என்று சொல்வார்கள், அதிர்ச்சிதான். நான் அங்கு சென்றவுடனே சொல்கிறார்கள். நீங்கள் கேள்வி கேட்டவுடனே, 15 நாட்களில் எங்களுக்கு மின்மாற்றியை மாற்றிக் கொடுத்துவிட்டார்கள். ஆக, எங்களுக்கு தற்போது எந்தப் பிரச்சினையும் இல்லை*

என்று சொல்கிறார்கள். இனிவரும் காலங்களில் இப்படிப்பட்ட பிரச்சினை ஏற்படாமல் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–50

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஓராண்டில் மட்டும் தமிழகம் முழுவதும் உள்ள 234 சட்டமன்றத் தொகுதிகளில் 24,036 புதிய மின்மாற்றிகள் நிறுவப்பட்டு, பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. மேலும், கூடுதலாக எந்தெந்த இடங்களில் புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட வேண்டுமென்பது குறித்து துறை வாரியாக ஆய்வுகள் செய்யப்பட்டிருக்கின்றன. தேவை ஏற்படின், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, அந்தப் பணிகள் நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்றத்தூர் பேரூராட்சி, மாங்காடு நகராட்சி மற்றும் குன்றத்தூர் நகராட்சிகளில் சில இடங்களில், நகராட்சிப் பகுதிகளில் மின்மாற்றிகளை தரையில் வைத்திருக்கின்றார்கள். ஒரு சில இடங்களில் ஒரு மீட்டர் அளவுக்கு உயரத்தில் வைத்திருக்கிறார்கள். இது எதற்காக என்றால், தரையில் வைக்கும்போது மழைக் காலங்களில், வெள்ளம் ஏற்படும் காலங்களில் இந்த மின்மாற்றிகள் பழுதடைவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. இனிவருங்காலங்களில், எந்த இடங்களிலும் தரையில் மின்மாற்றிகள் இல்லாமல் ஒரு மீட்டர் அளவுக்கு உயரத்தில் தூக்கி வைக்கப்படும் என்ற உத்தரவாதத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளிப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

2022 மே 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் மழை வெள்ளத்தால் மின் விநியோகத்தில் பாதிப்புகள் ஏற்பட்டபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு மீட்டர் அளவுக்கு அந்த* pillar boxes *உயர்த்தப்பட வேண்டுமென்ற உத்தரவுகளை துறைக்கு வழங்கினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, சென்னையில் மட்டும் 1,336 இடங்களில்,* pillar boxes *ஒரு மீட்டர் அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளன. மீதம் இருக்கக்கூடிய இடங்களில் அதற்கான பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சட்டமன்றத் தொகுதியில் அவர் குறிப்பிட்ட இடங்களைக் கவனத்திலே கொண்டு, முன்னுரிமை கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள். (குறுக்கீடு) திரு. செல்லூர் கே. ராஜூ, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார், நீங்கள் கேள்வி கேளுங்கள். (குறுக்கீடு)*

திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார், நீங்கள் கேள்வி கேட்கிறீர்களா அல்லது வேறு உறுப்பினரை அழைக்கவா?*

திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி, கிருஷ்ணகிரி ஒன்றியம், சோக்காடி ஊராட்சியில் 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைப்பதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு, துறைக்கு கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிறது. எனவே, துணை மின் நிலையம் எப்போது அமைக்கப்படும் எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

ALONE TRIUMPHS

[2022 மே 5

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு 216 துணை மின் நிலையங்கள், இந்த ஆண்டு 100 துணை மின் நிலையங்கள் என மொத்தம் 316 துணை மின் நிலையங்களை அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அவருடைய சட்டமன்றத் தொகுதியில் அதற்கான பணிகள் துவங்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டே அதை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள்.*

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள வ.உ.சி. நகர், வெங்கடேசபுரம், அம்மையம்மாள் தெரு, கந்தசாமிகோயில் தெரு, எட்வர்ட் பார்க் தெரு,* Perambur High Road, *குட்டித்தம்பிரான் தெரு, வீராசாமி லேன், சாஸ்திரி நகர் ஆகிய பகுதிகளில் மின்மாற்றிகள் அமைத்துத் தர வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதியில் ஏற்கெனவே அமைக்கப்பட்ட மின்மாற்றிகளோடு, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற பகுதிகளில் இந்த ஒரு வார காலத்தில் எங்களுடைய துறை அதிகாரிகளை அனுப்பி, ஆய்வு செய்து, தேவை ஏற்படின், முன்னுரிமை அடிப்படையில் அதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2022 மே 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள்.*

திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், நன்னிலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வலங்கைமான் பகுதியில் உள்ள விளத்தூர் என்கிற கிராமத்தில் 15 இலட்சம் ரூபாய் செலவு செய்து, தனியாக, பொதுமக்கள் ஒன்றுகூடி மின்சார வாரியத்திற்கு ஒரு ஏக்கர் நிலம் கிரையம் செய்து கொடுத்திருக்கிறார்கள். ஆனால், ஓராண்டு ஆகியும் இன்னும் அதற்கான பணிகள் துவங்கப்படவில்லை. எனவே, துணை மின் நிலையப் பணிகள் எப்போது துவங்கப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். மேலும், அந்தப் பகுதியில் இருக்கின்ற. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், போதும். (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் நிலம் வாங்கிக் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) நிலம் வாங்கி வைத்திருக்கிறார்கள். மின்மாற்றி மாற்றுவீர்களா என்று சொல்லுங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள். உரையை முடியுங்கள்.*

திரு. இரா. காமராஜ்: *மின்சாரம் குறித்த பணிகளுக்காக, தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள மின்சார அலுவலகத்திற்குச் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, அதனை திருவாரூர் மாவட்டத்திற்கு மாற்றித் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–55

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட 216 துணை மின் நிலையங்களில், 193 துணை மின் நிலையங்களுக்கு இடங்கள் கண்டறியப்பட்டு, இப்போது அவற்றுக்கான மதிப்பீடுகள் தயார்*

செய்யப்பட்டு, டெண்டர் கோரக்கூடிய நிலையில் இருக்கின்றன. டெண்டர் முடிக்கப்பட்ட பணிகளுக்கு இப்போது ஒப்புதல் வழங்கப்பட்டு, விரைவாக பணிகள் மேற்கொள்ளப்படும். அதேபோல, திருவாரூர் மாவட்டத்தில் அருகில் இருக்கக்கூடிய தஞ்சாவூர் மாவட்ட மின்வாரிய அலுவலகங்களுக்குச் செல்வதாகச் சொன்னார்கள். தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய பல்வேறு மாவட்டங்களில் எல்லையில் இருக்கக்கூடியவர்கள் அந்தந்த மாவட்டங்களை விட்டு வேறு மாவட்டத்தினுடைய அலுவலகத்திற்குச் செல்லக்கூடிய நிலைகளை மாற்றி, அந்தந்த மாவட்டங்களில் இருக்கக்கூடிய மின்னிணைப்புகள் அந்த மாவட்டத்தினுடைய அலுவலகத்திலேயே பயன்பெறக்கூடிய வகையில் அமைக்கப்பட வேண்டுமென்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவு. அதற்கான பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணிகள் இந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள்.*

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், பாலக்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் புதிதாக தெரு விளக்குகள் அமைப்பதற்காக சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கப்பட்டு, கடந்த ஆண்டு கொடுக்கப்பட்டது. இன்று வரை அந்த மின் கம்பங்கள் அமைக்கப்படாமல் இருக்கின்றன. கேட்டால், மின் கம்பங்கள் பற்றாக்குறை என்று கூறுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக, மின் கம்பங்களை அந்தப் பகுதிகளுக்குக் கிடைக்கப் பெறச் செய்து, தெரு விளக்குகள் அமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையான அளவிற்கு மின் கம்பங்கள்

2022 மே 5]

இருப்பிலே உள்ளன. மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள் எந்த இடத்தைக் குறிப்பிட்டார்கள் என்று தெரியவில்லை. இன்று சட்டமன்றக் கூட்டம் முடிந்தபிறகு, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளை அழைத்துப் பேசி, அதற்கு விரைவில் தீர்வு காணப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தமிழகத்திலே எல்லா பகுதிகளிலும் வீடுகள் இருக்கக்கூடிய இடங்களில் மாடியிலிருந்து சில இடங்களில் உயரழுத்த மின் கம்பிகள் குறுக்கிலும், நெடுக்கிலும் போய்க் கொண்டிருக்கின்றன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் மின்மாற்றி வேண்டுமென்று கேளுங்கள்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *பதில் இருந்தால், சொல்லட்டும். மின் கம்பங்களை வீடுகளுக்கு அருகே மாற்றும்போது, அதற்கான* estimate charge *மிகவும் அதிகமாகப் போடப்படுகிறது. அனைவரும்* estimate charge*-க்கான பணத்தைக் கட்டியும், அந்த மின் கம்பிகளை மாற்ற முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, மின்சார வாரியத்திற்கு ஓர் அறிவுறுத்தல் கொடுக்க வேண்டும். இதனால், ஏழைகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஏழைகள் பாதிக்கப்படவில்லை. பஞ்சாயத்தில் தீர்மானம் போட்டு கொடுத்துவிட்டால், ஒரு பைசாகூட வாங்க மாட்டார்கள்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *அவர்களுக்குப் பணம் கட்ட முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, மின்சார வாரியத்திற்கு ஓர் அறிவுறுத்தல் கொடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்தப் பகுதிகளில் இதுபோன்று இருக்கிறது என்று சுட்டிக்காட்டினால், அதற்கு முன்னுரிமை கொடுத்து ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய இதுபோன்ற நிலைகளில் குறிப்பிட்ட இடங்களில் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மீதம் இருக்கக்கூடிய இடங்கள் கவனத்தில்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள்.

திரு. S.S. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணிக்கு வாய்ப்புக் கொடுத்து, பழனிக்கு வாய்ப்புக் கொடுத்து, திருப்போரூருக்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிறீர்கள், நன்றி. ஆனால், நான் கேட்கப் போவது, திருப்போரூருக்கு அல்ல; திருக்கழுக்குன்றத்திற்கு கேட்கப் போகிறேன். திருக்கழுக்குன்றத்திலே power transformer பழுதடைந்து, அது தொடர்பாகப் புகார் அளிக்கப்பட்டு, இன்னும் மாற்றப்படாமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை உடனடியாக மாற்றித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்மாற்றிகள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இன்னும் 2 தினங்களில் அந்தப் பணிகள் நிறைவு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில்

2022 மே 5]

மின் கம்பங்கள் அமைக்கக் கோரி நிதி ஒதுக்கீடு செய்கிறபொழுது, ஒரு சில ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் அந்த ஊராட்சிக்குரிய மின் கட்டணத் தொகை செலுத்தப்படாமல் இருக்கிற காரணத்தால், உறுப்பினர்களுக்குரிய மின் கம்பங்கள் அமைக்க முடியாது என்று கோட்ட அலுவலகங்களில் பரவலாக ஒரு பதில் இருக்கிறது. இது எல்லா உறுப்பினர்களுக்கும் உள்ள பொது செய்தி. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதில் தலையிட்டு ஊராட்சி மன்றம் கட்டத் தவறியிருந்தாலும், நிலுவை பாக்கியிருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மின் கம்பங்கள் அமைக்க அனுமதி தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் மற்ற துறைகளைப் பொறுத்தவரையில், குறிப்பாக குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளைப் பொறுத்தவரையில், மின்சார வாரியத்திற்கு வழங்க வேண்டிய தொகை நிலுவையில் இருந்தாலும்கூட, அந்தத் தொகையை வழங்கும்வரை பணிகளை நிறைவேற்றாமல் நிலுவையில் வைக்கக்கூடாது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவுகளை வழங்கியிருக்கின்றார்கள். எனவே, அரசு மற்ற துறைகளைப் பொறுத்தவரையில், மின்சார வாரியம் முன்னுரிமை கொடுத்து அந்தப் பணிகளை மேற்கொள்கிறது. மாண்புமிகு அரசுக் கொறடா அவர்கள் சுட்டிக்காட்டியிருப்பது போன்று அவருடைய தொகுதியில் ஏதேனும் இருந்தால், அதற்கு முன்னுரிமை கொடுத்து, பணிகள் மேற்கொள்ளப்படும். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரிவிப்பது, மற்ற துறைகளைப் பொறுத்தவரையில், மின்சார வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய தொகை நிலுவையில் இருந்தாலும்கூட முன்னுரிமை கொடுத்துப் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. வரக்கூடிய காலங்களில் அந்தத் தொகைகளைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு கொறடா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

வினா வரிசை எண் 227, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

227—

சன்னதியைப் புனரமைத்தல்

***3119—திரு. அம்மன் K. அர்ச்சுணன்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் (வடக்கு) தொகுதி, மருதமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் உள்ள பாம்பாட்டி சித்தர் சன்னதியைப் புனரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) உறுப்பினர் கேட்டிருக்கின்ற அந்த பாம்பாட்டி சித்தர் ஆலயம் மருதமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்குள் அமைந்திருக்கின்றது. கடந்த 2013 ஆம் ஆண்டுதான் திருப்பணிகள் நடைபெற்று குடமுழுக்கு நடந்து முடிந்திருக்கிறது. அடுத்தாண்டு மீண்டும் குடமுழுக்கு நடைபெற வேண்டிய நிலை இருந்தாலும், முன்கூட்டியே அதற்குண்டான பணிகளை தற்போதே எடுத்துக்கொண்டிருக்கின்றோம். ஆகவே, இந்தத் திருப்பணிகளோடு சேர்த்து பாம்பாட்டி சித்தர் வாழ்ந்த அந்த இடத்தில் பக்தர்கள் வந்து நல்ல முறையிலே தியானம் செய்யக்கூடிய வகையிலேயும், அவரை தரிசித்து செல்லக்கூடிய வகையிலேயும் ஒரு நல்ல சூழ்நிலை, ஓர் இரம்மியமான சூழ்நிலை உருவாக்கித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.